www.StudyGuideIndia.com

**7770**

Register Number | | | | | | |

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.  40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. கூட்டுப்பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது

அ) நிறுமப் பதிவாளரிடம்  ஆ) இயக்குனரவையிடம்

இ) பங்குதாரர்களிடம்  ஈ) கடன்பத்திரதாரர்களிடம்.

2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு

அ) தனிவணிகர்  ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுப்பங்கு நிறுமம்  ஈ) இந்து கூட்டுக் குடும்ப வணிகம்.

3. தனியாள் வணிகத்தில்

அ) வியாபார இரகசியங்களை காக்க இயலாது

ஆ) வியாபார இரகசியங்களை காக்க இயலும்

இ) இவற்றுள் எதுவுமில்லை.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. கூட்டாண்மை பதிவு

அ) கட்டாயம்

ஆ) விருப்பத்தின் பேரில்

இ) அவசியமில்லை.

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது

அ) ஒப்பந்தத்தால்

ஆ) கூட்டாளிகளிடையே உறவு

இ) அரசின் வழிகாட்டல்.

6. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு

அ) பூரண நல்ல நம்பிக்கை

ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

இ) கூடி தொழில் செய்ய விருப்பம்.

7. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை *A* என்பது

அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி.

8. கீழ்க்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர் ?

அ) நிறுமம் இலாபம் ஈட்டும் பொழுது மட்டும்

ஆ) பங்குநர்கள் பங்காதாயம் பெறும் பொழுது

இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்

ஈ) இவை அனைத்து சூழ்நிலைகளிலும்.

www.StudyGuideIndia.com

9. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 3

இ) 7 ஈ) 10.

10. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்

அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள்

இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்.

11. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் .................. மிகக்கூடாது.

அ) நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டை

ஆ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொதுக்காப்பிருப்புத் தொகையில் 11 விழுக்காட்டை

இ) நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டை

ஈ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிருப்புத் தொகையில் 5 விழுக்காட்டை.

12. கீழ்க்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தை கூட்ட வேண்டும் ?

அ) சட்டமுறை நிறுமங்கள்

ஆ) தனிவரையறை நிறுமங்கள்

இ) பொது வரையறை நிறுமங்கள்

ஈ) பட்டய நிறுமங்கள்.

13. ஒரு இயக்குநர் .................. செயலாற்றுகிறார்.

அ) நிறுமத்தின் முகவராக

ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக

இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ) இவை அனைத்தும்.



www.StudyGuideIndia.com

14. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது

அ) சரக்கு ஆ) சேவைகள்

இ) நிதி பத்திரங்கள் ஈ) நாட்டின் பணம்.

15. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை

அ) பொது விடுப்புகள்/வெளியீடு

ஆ) விற்பனைக்கான தருமொழி

இ) மேலாண்மை தரகர்கள்

ஈ) ஒப்புறுதியளித்தல்.

16. ஒரு காளை ஊக வணிகர் இதை நம்புகிறார்

அ) விலைகள் உயருதல் ஆ) விலைகள் குறையும்

இ) நிலையான விலைகள் ஈ) விலையில் மாற்றமேதுமிருக்காது.

17. கூட்டுறவுச் சங்கம் அமைக்க தேவைப்படும் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 7

இ) 10 ஈ) 25.

18. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்

அ) மாற்றமுடியும் ஆ) திருப்பி செலுத்த முடியாது

இ) மாற்ற முடியாது ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

19. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்த பட்சப் பங்கு முதல்

அ) 51 விழுக்காடு ஆ) 60 விழுக்காடு

இ) 75 விழுக்காடு ஈ) 90 விழுக்காடு.

20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு

அ) துறைவாரி அமைப்பாகும்

ஆ) பொதுக் கழகமாகும்

இ) அரசு நிறுமமாகும்

ஈ) கூட்டு பங்கு நிறுமமாகும்.

www.StudyGuideIndia.com

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. அரசு நிறுமத்தின் ஊழியர் ..................... அல்லர்.

22. ..................... அவர்கள், உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்று கூறுகிறார்.

23. ..................... தனியாள் வணிகரின் கடின உழைப்பிற்குத் தூண்டுகோலாய் அமைகிறது.

24. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப-நட்டம் ..................... பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

25. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு ..................... .

26. வங்கித்தொழில் அல்லாத பிற கூட்டாண்மைத் தொழிலுக்கு அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை .....................

27. நிர்வாகத்தில் பங்கேற்காத கூட்டாளியை ..................... என்றழைக்கிறோம்.

28. தனிவரையறு நிறுமத்தில் குறைந்தது ..................... இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.

29. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது ..................... .

30. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளத் தேவையில்லாத நிறுமம் ..................... நிறுமம் ஆகும்.

31. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க, வருகைதர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை ..................... ஆகும்.

32. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய ..................... தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

33. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ..................... இல் பெயரிடப்பட்டிருப்பர்.

[ Turn over

www.StudyGuideIndia.com

34. விண்ணப்பத் தொகை ஒரு பங்கின் மதிப்பு தொகையில் ...................... சதவிகிதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.

35. குறுமப் பங்கொப்பம் வெளியிடப்படும் பங்கு முதலில் ...................... சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது.

36. கூட்டுப் பங்கு நிறுமங்களுக்கு ...................... தேவை.

37. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ...................... .

38. கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை ...................... கொண்டது.

39. பொது கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ...................... நிருவாகம் செய்கிறது.

40. இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு ...................... அமைப்பாகும்.

## பகுதி - ஆ

*குறிப்புகள் :* i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் *நான்கு வரிகளுக்கு* மிகாமல் விடையளிக்க.

10 × 4 = 40

41. பொதுக் கூட்டுரு என்றால் என்ன ?

42. வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக.

43. தனியாள் வணிக அமைப்பு என்றால் என்ன ?

44. ஒரு கூட்டாண்மையின் உட்கிடை ஆணையுரிமைக்கு வரைவிலக்கணம் தருக.

45. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன ?

46. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன ?

47. நிறுமத்தின் பொது இலச்சினைக்கான சிறப்பு யாது ?

www.StudyGuideIndia.com

48. சட்டமுறை அறிக்கை என்றால் என்ன ?

49. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன ?

50. இரண்டாம் நிலைச் சந்தை என்றால் என்ன ?

51. ஒப்புறுதியளித்தல் என்றால் என்ன ?

52. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளைக் கூறுக.

53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன ?

54. பொதுக் கழகத்தின் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுக.

55. பொதுக் கூட்டுறுவின் ஏதேனும் நான்கு உதாரணங்கள் தருக.

## பகுதி - இ

*குறிப்புகள் :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொன்றிற்கும் *ஒரு பக்க* அளவிற்கு மிகாது விடையளி. $5 \times 8 = 40$

56. ஏதேனும் இரண்டு தனி நபர் வியாபார அமைப்பு பற்றி எழுதுக.

57. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.

58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை ?

59. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய முக்கிய நிபந்தனைகள் யாவை ?

60. இயக்குநரின் தகுதியின்மைகள் யாவை ?

61. பரஸ்பர நிதியகம் - விளக்குக. அவற்றின் நன்மைகள் யாவை ?

62. கூட்டுறவுச்சங்கத்தின் ஏதேனும் எட்டு குறைபாடுகளை விவரி.

63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை ?

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

*குறிப்புகள் :* i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் *இரண்டு* பக்க அளவிற்கு மிகாது விடையளி.

$4 \times 20 = 80$

64. அமைப்பின் கோட்பாடுகளில் ( ஏதேனும் பத்து ) விவரி.

*அல்லது*

பொதுக்கழகத்தின் இயல்புகளையும், நிறை மற்றும் குறைகளையும் விளக்குக.

65. தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது. விவரி.

*அல்லது*

கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பியல்புகள் ஏதேனும் பத்து விவரி.

66. கூட்டாண்மை - தனியாள் வாணிகத்திற்கு உள்ள ஏதேனும் பத்து வேறுபாடுகளை விவரி.

*அல்லது*

பங்கு மாற்றகம் - வரைவிலக்கணம் எழுதுக. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் மற்றும் பணிகளை விளக்குக.

67. பங்குகட்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

*அல்லது*

நிறும இயக்குநர்களின் கடமைகள், உரிமைகள் குறித்துச் சுருக்கமாக விளக்குக.

www.StudyGuideIndia.com